**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** — **தலைவர்**
**K.சந்திரசேகரன்,B.A** — **பொதுச்செயலாளர்**
**B.தியாகராஜன், M.Com.,** — **நிதிச்செயலாளர்**

கடித எண்: 42/19
20.02.2019

பெறுநர்,
இயக்குனர் / நிதி,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

பெரு மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : நிதி – அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நிர்வாகம் வழங்க வேண்டிய தொகைகளை வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுகோள்.

*********

கீழ்கண்டவற்றை தங்களது மேலான கவனத்திற்கு உரிய அவசர நடவடிக்கை மேற்கொண்டிட வேண்டி கொண்டு வர விழைகின்றோம்.

மின் உற்பத்தி, விநியோகம் உள்ளிட்ட பல்வேறு வட்டங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியத்தை தவிர பயணப்படி, சரண்விடுப்பு ஊதியம், வைப்புநிதி முன்பணம் போன்ற ஏனைய வகைதொகைகள் கடந்த 4 மாதங்களாக வழங்கப்படவில்லை. அதற்கான காரணம் தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலகத்திலிருந்து நிதி ஒதுக்கீடு வழங்கப்படாதது தான் என அறிய வருகிறோம்.

இதன் காரணமாக அனைத்து பகுதியிலும் பணிபுரியும் அலுவலர்களும், ஊழியர்களும் பெருத்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

தாங்கள் இப்பிரச்சனையில் தலையிட்டு அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய தொகைகளை தாமதமின்றி வழங்கிட தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்திட ஆவன செய்திட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் : 1.நிதிச்செயலாளர். 2.அமைப்புச்செயலாளர்.
3.தலைவர். 4. செய்திமடல்.